ரூ. 5.00

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

தமிழ் ஆண்டு 2039

மாசி - பிப்ரவரி 2008



28-01-2008, காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் நமது சிறப்பாசிரியர் பட்டமளிப்புவிழாப் பேருரையாற்றல்

சிறப்பாசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

விளம்பரக் கட்டணம்

விவரம்	அளவு	1 வெளியீடு	12 வெளியீடு
பின் அட்டை			
வெளிப்புறம்	1 பக்கம்	ரூ. 750	ரூ. 7500
அட்டை உட்புறம்	1 பக்கம்	ரூ. 650	ரூ. 6500
இதழ் உட்புறம்	1 பக்கம்	ரூ. 500	ரூ. 5000
இதழ் உட்புறம்	1/2 பக்கம்	ரூ. 350	ரூ. 3500

சந்தா விவரம்

தனி இதழ்	ரூ. 5-00
ஆண்டுச் சந்தா	ரூ. 60-00
ஆயுட் சந்தா	ரூ. 600-00
புரவலர் கட்டணம்	ரூ. 1000-00

சந்தா - விளம்பரம் அனுப்பவேண்டிய முகவரி :

நிர்வாகி,

மக்கள் சிந்தனை

குன்றக்குடி - 630 206

தொலைபேசி எண். 04577 - 264227

ஆதீன இணையதள முகவரி :
website : www.kundrakudiadheenam.org.

ஆசிரியர்

மரு. பரமகுரு

அச்சிட்டு வெளியிடுவோர் :
சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி.

91/1

மக்கள் சிந்தனை

நிறுவனர் : **தவத்திரு குன்றக்குடி அடிகளார்**

தமிழ்ஆண்டு 2039	மாதம் : மாசி
மலர் : 22	இதழ் : 2

தொடரும் கல்விப் பயணம்

அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்,
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்

என்று மகாகவி பாரதி உரக்கக் கூறினார்!

அடிமை இந்தியாவில், பண்ணைவீட்டுத் திண்ணைகளே பள்ளிகளாய் இருந்தபொழுது சாதியின் அடிப்படையில் கல்வி மறுக்கப்பட்ட பொழுது, "சகலருக்கும் கல்வி வழங்கு! ஏழைகளுக்குக் கல்வி வழங்கு! அது கோடி புண்ணியம்" என்று பாரதி கூவினான்!

சுதந்திர இந்தியா மலர்ந்து, கல்வி வழங்குவது அரசின் சேவையாக மக்களின் தேவையாக மாறிவரும் காலகட்டம்! எளிமையின் கோலம்! தூய்மையின் வடிவம்! நேர்மையின் திருஉருவம்! அந்தப் பெரிய மனிதர் சாலை ஓரத்தில் மாடு மேய்க்கும் சிறுவனைப் பார்த்தார்! "பள்ளிக்கூடம் ஏன் போகவில்லை?" என்று கேட்டார்! "பள்ளிக்கு போனா, சாப்பாட்டுக்கு என்ன செய்யுறது?" என்று அந்தச் சிறுவன் கேட்ட கேள்வி அவரை உலுக்கிப்போட்டது!

அந்த இடத்திலேயே கணக்குப்போட்டார்! எல்லாப் பிள்ளைகளும் பள்ளிக்கு வரணும்! அதற்கு என்ன வழி? ஒரு

வேளை மதிய உணவு வழங்கினால் எல்லாப் பிள்ளைகளும் பள்ளிக்கு வருவார்கள் என்றார்; நாளை முதல் பள்ளியில் பயிலும் எல்லாப்பிள்ளைகளுக்கும் ஒரு வேளை மதிய உணவு வழங்க வேண்டும் என்று ஆணையிட்டார்! அதற்காக நிதி தேவைப்பட்டால் தெருத் தெருவாகப் பிச்சை எடுக்கவும் தயார்! என்று அறிவித்தார்!

தடுக்கி விழுந்தால் தொடக்கப்பள்ளி!
வழுக்கி விழுந்தால் நடுநிலைப்பள்ளி!
ஓடி விழுந்தால் உயர்நிலைப்பள்ளி!

என்று கல்வி யுகத்தில் மறுமலர்ச்சிக்கு வித்திடப்பட்டது. கல்வி யுகத்தில் ஒரு வேளை மதிய உணவுக்கு வித்திடப்பட்டது! கல்வி மறுமலர்ச்சிக்கு வித்திட்ட கறுப்பு மனிதர்தான் பெருந்தலைவர் காமராசர்! அவர் இலவச மதிய உணவுத் திட்டம் மூலம் அறிமுகப்படுத்திய கல்விப் புரட்சி, அமரர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் வழங்கிய இலவச சத்துணவு திட்டமாக மாறி, பின்னர் இந்நாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் வாரம் மூன்று முட்டை வழங்கும் சத்துணவு திட்டமாக விரிவடையச் செய்துள்ளது.

இறைபணியோடு கல்விப் பணியையும் நம் மகாசன்னிதானம் ஏற்று அறியாமை இருளில் தவித்த ஏழை எளிய மக்களுக்குக் கல்வி வெளிச்சத்தை ஏற்றி வைத்தார்கள். அந்தக் கல்வி வெளிச்சம் பரவலாக வளர்ந்து அதன் முக்கிய சேவையாக மலர்ந்ததுதான் மகளிர் கல்வி மேம்பாடு! மகளிர் கல்வி மேம்பாட்டில் செயற்கல்வி தளத்தில்தான் குன்றக்குடியில் மகளிர் கல்வியியல் கல்லூரி உதயம்!

இக்கல்லூரி நமது குருமகாசன்னிதானத்தின் நூல்களை நாட்டுடைமையாக்கி வழங்கிய நிதியை, விதைமூலதனமாகக் கொண்டு தொடங்கப்பெற்றது! கருநாடக மாநிலம் பெங்களூரில் உள்ள தேசிய ஆசிரியர் பயிற்சி நிறுவனம் சோதனை ஆய்வுகளை நிகழ்த்தி, அனுமதி வழங்கி உள்ளது. தாயுள்ளத்தோடும்,

பேரன்போடும் முத்தமிழறிஞர் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அனுமதி ஆணை வழங்கிட ஆணையிட்டார்! பேரன்புக்குரிய கல்வி அமைச்சர் மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி அன்புள்ளத்தோடு அனுமதி வழங்கினார். அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் ப. இராமசாமி அவர்கள் மிகுந்த அன்போடு விரைந்து அங்கீகார உத்தரவு வழங்கி உள்ளார். பதிவாளர் உள்ளிட்ட பல்கலைக்கழக நிர்வாகத்தின் பணிகள் பாராட்டுக்குரியது. இப்பணி கருவாகும்பொழுது உடனிருந்து வழிகாட்டியவர் முன்னாள் துணைவேந்தர் டாக்டர் பெ. கன்னியப்பன் அவர்கள்! இப்பணிக்கு உயிர்ப்பு உண்டாக்கி எல்லாப் பணிகளுக்கும் மூலமாக விளங்கியவர் டாக்டர். எஸ். மோகன் அவர்கள். டாக்டர்.எஸ். மோகன் அவர்களின் முழுமையான வழிகாட்டுதலில் கல்வித் திருப்பணி அருமையாய் அமைந்தது. டாக்டர் ந.ராஜ்குமார் ஆற்றிவரும் அரும்பெரும் பணிக்கு ஈடு இணை இல்லை. டாக்டர். சுப்பையா, டாக்டர். கே. பாலகிருஷ்ணன் ஆகியோர் பணிகள் மறுதலிக்க முடியாதவை. டாக்டர். பாலகிருஷ்ணன், ஆர்.கே. சுந்தரராஜன் ஆகியோரின் பணிகள் மகத்தான பங்களிப்பு உடையது. உயிர் கருவானது முதல் கல்விக்கோயில் உருவாவதற்கு உயிர்த்துடிப்பாய் விளங்கிய திருமடத்து அலுவலர்கள், அன்பர்கள் அனைவருக்கும் நன்றி. குருமகாசன்னிதானத்தின் உணர்வுகள் குடியிருக்கும் கல்விக்கோயில் இது. இந்தக் கோயிலை வணங்கிப் போற்றுவோம்.

கல்விப்பயணம் செம்மையாய்த் தொடர்ந்திட இறையருளையும், குருமகாசன்னிதானத்தின் பெருங் கருணையையும் போற்றி வணங்குகின்றோம்.

சகலருக்கும் கல்வி வெளிச்சம் வழங்கக் கல்விக் கோயிலின் வழி கல்விப்பணி என்றும் தொடரும்!

தொடரும் நம் கல்வி உலகப் பயணம்

என்றும் வேண்டும் இன்ப அன்பு

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

திருக்குறள் உரை

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

84. பேதைமை

பேதைமை - யாதும் அறியாமை என்று உரையாசிரியர் கூறியுள்ளார். யாதும் அறியாதவர் எவரும் இல்லை என்பதால் அறிய வேண்டுவனவற்றை அறியாமல் அறிய வேண்டுவனவற்றை அறிந்து கொள்ளும் உணர்ச்சியில்லாமல் இருப்பது பேதைமை என்று கொள்ளல் சிறப்பு. அல்லது முறை பிறழ அறிவது பேதைமை என்றும் கொள்ளலாம். பேதைமை குற்றங்கள் யாவினும் பெரிய குற்றம்.

பேதைமை என்பதுஒன்று யாதெனின் ஏதம்கொண்டு
ஊதியம் போக விடல். (831)

பேதைமை என்பது யாது? துன்பத்தைக் கொள்முதல் செய்து கொண்டு ஆக்கத்தைக் கைவிடல்.

ஆக்கம் - கேடு இவற்றின் தன்மையும் அருமையும் அறியாமை பேதைமையால் நிகழ்வது.

பேதைமையுள் எல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கண் செயல். (832)

பேதைமை யெல்லாவற்றுள்ளும் பேதைமையாவது, தனக்கு ஆகாத ஒழுக்கத்தை விரும்புவது.

பேதைமையுள் பேதைமை தனக்கில்லாதவற்றை விரும்புதல், செய்தல் என்றும் பொருள் கொள்ளலாம்.

மக்களாட்சி முறையில் ஆளவந்தோர் மக்களுக்காகவன்றித் தனக்காகத் தன் குடும்பத்துக்காக ஒன்றை விழைதல் பேதைமை.

நாணாமை நாடாமை நார்இன்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில். (833)

நாணவேண்டுவனவற்றிற்கு நாணமில்லாமல் இருத்தலும் நாடித் தேடவேண்டியவைகளை நாடாமல் இருத்தலும் யாரும் தன்னிடம்

அன்பில்லாமல் போவதற்குரிய செயல்களுடைமையும் பேணிக் காக்க வேண்டியனவற்றைப் பேணிக் காக்காமையும் பேதையின் தொழில்.

"யாதொன்றும்" என்ற சொல்லைக் கூட்டி, யாதொன்றும் நாணாமை, யாதொன்றும் நாடாமை, யாதொன்றும் நாரின்மை, யாதொன்றும் பேணாமை என்று எண்ணுதல் வேண்டும்.

பிறர் வசையால் வரும் உணர்ச்சி வெட்கம் அல்ல; தன்னுடைய தகுதி செயலின்மை நோக்கி வருவதே வெட்கம்.

ஓதி உணர்ந்தும் பிறர்க்குஉரைத்தும் தான்அடங்காப்
பேதையின் பேதையார் இல். (834)

அடக்கத்தினைத் தரும் செயலாகிய நூல்களை ஓதியும், நூல்களின் பயனை உணர்ந்தும், அந்நூற் பயன்களைப் பிறர்க்கு உரைத்தும் தான் அடங்காது வாழும் பேதையைப் போல் வேறொரு பேதை இல்லை.

"கற்றதால் மட்டும் பயன் இல்லை" என்பது கருத்து.

ஒருமைச் செயல்ஆற்றும் பேதை எழுமையும்
தான்புக்கு அழுந்தும் அளறு. (835)

பேதை எழுபிறப்புக்களிலும் நரகத்தில் அழுந்துதலுக்குரிய தீமைகளை இந்த ஒரு பிறப்பிலேயே செய்து கொள்கிறான்.

நாலும் அறிந்து செய்யாமல் ஒரு புத்தியிலேயே காரியங்களைச் செய்பவன் எழுமையும் நரகத் துன்பத்தில் அழுந்துதலுக்குரியனவற்றைச் செய்கின்றான்.

"மதிநுட்பம் – நூலறிவு" என்றார்போலக் கொள்க.
"அழிவதற்குக் காலம் அதிகம் தேவை இல்லை"

பொய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப்
பேதை வினைமேல் கொளின். (836)

செய்யும் தொழிலின் செய்முறை தெரியாத ஒருவன் அந்தத் தொழிலைச் செய்ய முற்படுவானாயின் அத்தொழிலின் பயன் கைகூடாது. மேலும் இகழ்ச்சியை அணியாகப் பெறுவான்.

செயல்கள், செய்யும் முறைமைகளினாலேயே வெற்றியைத் தருகின்றன என்பதை உணர்த்தியது.

ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை. (837)

அறிவிலாதவனிடத்தில் செல்வம் சேர்ந்தால் பகைவர் உண்டு மகிழ்வர். சுற்றத்தார் பசித்துன்பமுறுவர்.

மையல் ஒருவன் களித்தற்றால் பேதைதன்
கையொன்று உடைமை பெறின். (838)

அறிவிலான் ஒருடைமை பெறுவானாயின் பித்தனைப் போலவும், கள் குடித்தவனைப் போலவும் களித்திடுவான்.

"ஒருடைமை பேறின்" என்றதால் பெற வேண்டுவன எல்லாம் பெறவில்லை என்றுணர்த்தியமை அறிக.

பெரிதுஇனிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதுஒன்று இல். (839)

அறிவில்லாதார் நட்பு பெரிதும் இனிது; அவர் நட்புப் பிரிவின்கண் துன்பம்தருதல் இல்லை. ஆதலால் இனிது.

"பேதையார் நட்பு, தருவதொன்றில்" என்பது ஆய்வுக்குரியது.

பேதையார் பிரிவில் துன்பம் வராதா? அதாவது நமக்குத் துன்பம் இல்லை. பேதையார் துன்பமே செய்வார்கள். இதுவே உலகியல்.

அறிஞர் பிரிவு இழப்பைத் தரும் என்பது உண்மை.

கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல். (840)

கால்களைத் தூய்மை செய்யாமல் படுக்கையில் வைத்த செயல் போன்றது சான்றோர் அவைக்குள் பேதை புகுதல்.

(தொடரும்)

எந்த ஒரு சூழ்நிலையிலும் உணர்ச்சிகளைக் கடக்கவேண்டும். புத்திசாலித் தனத்துடன் நடந்துகொள்ள வேண்டும். உணர்ச்சிவெறும் எழுச்சி, அது பயன்தராதது மட்டுமன்றி எதிர்விளைவுகளையும் தரும். அறிவார்ந்த சிந்தனையும் செயலுமே வாழ்க்கைக்கு ஆக்கம் தரும். சமுதாயம் அமைதியாக இயங்கவும் சிந்தனை வழிப்பட்ட செயல்கள் துணை செய்யும்.

- அருள்நெறித்தந்தை

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
23-ஆவது குருமகாசன்னிதானம்
சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக
பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்
திருவாவடுதுறை - 609 803
நாகை மாவட்டம்
தொலைபேசி எண். 04364-232021





நாள் : 10-01-2008

"மகிழ்வுரை"

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க

தமிழகத்துச் சித்தாந்தச் சைவ ஆதீனங்களுள் ஒன்றான குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் குருமுதல்வரின் வழித்தோன்றலாக இன்று விளங்கி வரும் 46வது குரு மகாசன்னிதானம், இவ்வாண்டு தமிழ்நாடு அரசின் திருவள்ளுவர் விருதினை ஏற்றுக்கொண்டதை அறிந்து பெரிதும் நாம் மகிழ்கின்றோம். இது சைவ ஆதீனங்களுக்கே கிடைத்ததோர் பெருமையெனவும் நினைந்து மகிழ்கின்றோம்.

ஆதீனகர்த்தர்

திருவள்ளுவர் விருது பெற்ற குறட்பாரி

("கவிஞர்கோ" **சிற்பி. பாலசுப்பிரமணியம்**)

தமிழர் மனம் திருக்கோயில் ஆகக் கொண்ட
தவத்திரு அடிகளார் திருமுன்பு என்றன்
இமைப்போதும் மறந்தறியா உள்ளம் வைத்தேன்
இருகரமும் கூப்பி இதை எழுது கின்றேன்
தமக்காக வாழமல் தமிழர்க் காகத்
தந்தையென வாழுகின்றீர், துறவு வேந்தே
எமது மனம் உவகையினால் நிரம்ப இன்று
எந்தை திரு வள்ளுவனார் விருது பெற்றீர்!

ஆன்ற திருக்குறளுக்காய் அவை அமைத்து
அடிநாள் தொட் டின்றுவரை வள்ளுவத்தை
ஈன்ற தமிழ் நாட்டுக்கும் உலகினுக்கும்
எடுத்தெடுத்து வழங்கு குறட் பாரி ஆனீர்!
சான்றோரே! எம்குன்றக் குடி ஆதீனத்
தனித்தலைமை அருளரசே! உளம்நெகிழ்ந்து
வான்போல விரிகின்ற தமிழ் இனத்தின்
வணக்கங்கள் திருவடியில் வைக்கின்றேனே!

பழகுதலுக்கு உரியவரை - உறவினைத் தேர்ந்தெடுப்பதில் கவனம் தேவை. பலகாலும் அறிந்து ஆராய்ந்து தெளிந்து தேர்ந்தெடுக்க வேண்டும். தேர்ந்தெடுத்தபின் பிரிதல் கூடாது. "பேயோடு ஆயினும் பிரிவு தீயது" என்பது பழமொழி. நட்புக்கும் உறவுக்கும் மரபு வழிச்சார்புகள் பெரும்பாலும் துணை செய்வதில்லை. உணர்ச்சிப் போக்குகளும் துணை செய்வதில்லை. வாழ்க்கையின் குறிக்கோளே பெரிதும் நல்ல நடபுறவுக்கு துணை.

- அருள்நெறித்தந்தை

திருவள்ளுவர் விருது வழங்கும் விழாவில் முதல்வர் கலைஞர் உரை

இவ்விழாவில் அறிஞர் பெருமக்களுக்கு விருதுகளை வழங்கி உரையாற்றிய முதல்வர் கலைஞர் அவர்கள், திருவள்ளுவருடைய நெறிமுறையை மேற்கோள் காட்டுவது நம்முடைய சமுதாயம் வாழ, வாழ்க்கையின் தத்துவத்தை உணர வேண்டும் என்பதற்காகத்தான் என்றும் அண்ணல் அம்பேத்கர் எல்லோரையும் சமமாக மதித்தவர், அவரை ஒரு சமூகத்திற்குள்ளே புகுத்த விரும்பவில்லை என்றும் குறிப்பிட்டதோடு, நூலாசிரியர்களுக்கு வழங்கப்படும் பத்தாயிரம் ரூபாயை 20 ஆயிரம் ரூபாயாகவும் பதிப்பகங்களுக்கு ஒரு புத்தகத்திற்கு வழங்கப்படும் 2 ஆயிரம் ரூபாயை 5 ஆயிரம் ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும் என்றும் அறிவித்தார்.

வள்ளுவர் கோட்டத்தில் நடைபெறவேண்டிய ஒரு விழா நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த விழாவிற்கு யார் யாரை அழைப்பது, யார் யாருக்கு விருது வழங்குவது என்பதையெல்லாம் முடிவு செய்தவர், முதல் அமைச்சர் என்று இனமானப் பேராசிரியர் குறிப்பிட்டார். அதைவிட இந்த விழாவை எங்கே நடத்துவது என்ற வினா எழுந்தபோது, அதற்கு விடையாகக் கிடைத்தது தான் வள்ளுவர் கோட்டத்திலே நடத்தலாம் என்பது. நம்முடைய அடிகளார் பேசும்போது, வள்ளுவர் கோட்டத்திற்கும், எனக்கும் உள்ள தொடர்புகளையெல்லாம் எடுத்துரைத்தார். இந்த வள்ளுவர் கோட்டத்தின் அடிக்கல் நாட்டியதிலிருந்து, ஒவ்வொரு அங்குலமாக வள்ளுவர் கோட்டத்தின் சுவர்களும், கட்டிடமும் வளர்ந்த நேரத்தில் எல்லாம் இங்கே ஒரு குடிசை போட்டுக்கொண்டு அதிலே அமர்ந்து பணிகளை விரைவாக நடத்துவதற்கு வேகப்படுத்திக் கொண்டிருந்தவன் நான். ஆனால் அவரே இங்கே குறிப்பிட்டதைப் போல பெற்ற மகவு வளர்ந்து, மணவிழா நேரத்திலே, ஒரு தாய் அந்த விழாவைக் காண முடியாமல், தவித்த தவிப்பை அவர் இங்கே எடுத்துரைத்தார். கோட்டம் இங்கே திறக்கப்பட்டபோது, நாடு எந்த நிலையிலே இருந்தது என்பதும் நாமெல்லாம் எந்த நிலையிலே இருந்தோம் என்பதும் எல்லோருக்கும் தெரியும். அவற்றையெல்லாம் நான் இங்கே விழாவின் அருமை கருதியும், அரசியல் நாகரிகத்திலே கொண்டுள்ள அக்கறையின் காரணமாகவும் சொல்ல விரும்பவில்லை.

அய்யன் வள்ளுவர் என்று முதன் முதலில் சொன்னேன்

அடிகளார் இங்கே கூறியதின் காரணமாக ஒன்றைக் கூற விரும்புகிறேன். இருபதாண்டு காலம், 133 அடி உயர வள்ளுவர் சிலையை அமைப்பதற்காகத் திட்டமிட்டு, அது நிறைவேற முடியாமல், பல தடைகள், பல தயக்கங்கள், குறுக்கிட்ட தாமதங்கள் இவைகளையெல்லாம் கடந்து குமரி முனையிலே மறைந்த நம்முடைய அய்யா மூப்பனார் போன்றவர்கள் எல்லாம் வருகை தந்து நடைபெற்ற அந்த விழாவில், நான் வள்ளுவர் சிலையைத் திறந்து வைத்துப் பேச முடியாதவனானேன். காரணம் அந்த அளவிற்கு உணர்ச்சிவயப்பட்டேன். அப்போது தான் முதன் முதலாக அய்யன் வள்ளுவர் என்று சொன்னேன். அது இன்றளவும் எல்லோராலும் புழக்கத்திற்கு வந்த சொல்லாக ஆகி, யாராக இருந்தாலும் அய்யரே கூட, அய்யன் வள்ளுவர் என்று சொல்லுகின்ற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கின்றது என்பதை அறிவீர்கள்.

வள்ளுவருக்குப் புகழை சேர்த்து நாம் நம்மை புதுப்பித்துக்கொள்கிறோம்.

புத்தகமாக - கட்டிடமாக - ஓவியமாக படமாக அந்த வள்ளுவருடைய படத்தை இன்றைக்கு நாம் பயன்படுத்திக் கொண்டிருப்பதற்குக் காரணம், வள்ளுவருக்கு ஒரு புகழை உண்டாக்க வேண்டுமென்பதற்காக அல்ல. நாம் ஒழுங்காக வாழவேண்டும், நம்முடைய சமுதாயம் செம்மையாக நடைபெற வேண்டும். வீரமாக, விவேகமாக அறநெறியோடு வாழவேண்டும், ஒரு குடும்பம் என்றால் எப்படியிருக்க வேண்டும், வாழ்க்கை என்றால் எப்படி அமைய வேண்டும் என்ற இவைகளையெல்லாம் கற்றுக்கொள்ளக்கூடிய நிலை ஏற்பட இன்றைக்கு நாம் அய்யன் வள்ளுவரை பாராட்டிக் கொண்டிருக்கிறோம் என்றால், என்ன அர்த்தம்? அதுதான் உண்மையே தவிர, வள்ளுவருக்கு நாம் கோட்டம் கட்டியதால் புகழ் வந்துவிடப் போவதில்லை. அவருக்குப் புகழைச் சேர்த்து நாம் நம்மைப் புதுப்பித்துக்கொள்கிறோம். அவருக்கு உருவத்தை உருவாக்கி, நாம் நம்மை உருவாக்கிக் கொள்கிறோம். அதற்காகத் தான் நம்முடைய தன்னலத்திற்காகத்தான் - தன்னலம் என்றால் வேறு எந்தவிதமான விபரீதப் பொருளும் இல்லை, நம்முடைய சமுதாயம் வாழ, இனம் வாழ, மக்கள் வாழ, வாழ்க்கையை வகைப்படுத்திக் கொள்ள - வாழ்க்கை என்றால் என்ன என்ற தத்துவத்தை

உணர வள்ளுவரை நினைக்கிறோம். வள்ளுவருடைய அறிவுரையை மேற்கோள் காட்டுகிறோம். அதைத் தான் இங்கே நம்முடைய அடிகளார் அவர்கள் உணர்த்தினார்கள்.

நம்முடைய பேராசிரியர் அவர்கள் உரையாற்றும்போது, வள்ளுவர் தொட்டு இந்த விருது யார் யார் பெயரால் வழங்கப்படுகிறதோ, அவர்களுடைய பெயர்களையெல்லாம் சுட்டி - ஒவ்வொருவருடைய பெருமைகளையும் - அந்த விருதுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வித்தகர்களுடைய ஆற்றலையும், அருந்திறனையும் இங்கே எடுத்துரைத்திருக்கிறார்கள். குறிப்பாக நம்முடைய பொன்னம்பல அடிகளார் அவர்கள்; இன்று நேற்றல்ல; நீண்ட காலமாக இந்த இயக்கத்தோடு பழகிய நண்பராக இருக்கின்ற ஒரு மடாலயத்தின் நண்பர். குன்றக்குடி அடிகளார் வாழ்ந்த போது, ஒரு முறை நான் அந்த வட்டாரத்துக்குப் பேசச் சென்ற நேரத்தில், இயக்கத் தோழர்கள் எல்லாம் நான் காரிலே சாலையில் செல்லும்போது, காரை மறித்து இதற்கு மேல் நீங்கள் போகவேண்டாம், ஏனென்றால் அங்கே குன்றக்குடி அடிகளாருடைய கூட்டம் நடைபெறுகிறது என்று சொன்னார்கள். ஏன் அது நடந்தால் என்ன, நான் போனால் என்ன என்று கேட்டபோது, அவர் நம்முடைய இயக்கத்தை மிகவும் தாக்கிப் பேசுகிறார் என்றார்கள். மறுநாள் நான் ஒரு அரசினர் விருந்தினர் மண்டபத்திலே தங்கியிருந்தேன். அடிகளார் பக்கத்து அறையிலே தங்கியிருந்தார். இருவரும் சந்தித்துக் கொண்டோம். யார் யாரைப் பார்க்க - முதலில் விரும்பினோம் என்றெல்லாம் நான் சொல்லவிரும்பவில்லை. இருவருமே விரும்பினோம். யார் முதலிலே செல்வது என்பதிலே தான் சற்றுத் தயங்கினோம். இருவரும் சந்தித்து ஒரு மணி நேரம் அந்த விருந்தினர் மாளிகையிலே பேசிக்கொண்டிருந்தோம். அதற்குப்பிறகு அவருக்கும் பெரியாருக்கும் உள்ள தொடர்புகளைப் பற்றியும், அவருக்கும் அண்ணாவிற்கும் உள்ள தொடர்புகளைப் பற்றியும் விவரித்தார். அது எங்கே போய் முடிந்தது என்றால், அவரையே மேலவையிலே ஒரு உறுப்பினராக உட்கார வைத்து அவரை நானே வாழ்த்துகின்ற ஒரு நிலைமை தி.மு.கழக ஆட்சியிலே ஏற்படுகிற அளவிற்கு போய் முடிந்தது.

ஆன்மீகத்திற்கும் அறிவியக்கத்திற்கும் இடையிலே ஏற்பட்ட உறவு

அப்போது அவர் எழுதிய ஒரு வாழ்த்துக் கவிதை – நெஞ்சுக்கு நீதி – புத்தகத்திலே நான் வெளியிட்டிருக்கிறேன். இன்றைக்கும் படித்தால் பழைய நினைவுகள் என்னுடைய நெஞ்சில் பசுமையாக நிழலாடும். அப்படிப்பட்ட ஒரு உறவு ஆன்மீகத்திற்கும், அறிவியியக்கத்திற்கும் இடையிலே ஏற்பட்ட ஒரு உறவு – அந்த உறவு இன்றளவும் நிலைத்து, இந்த இரண்டு தத்துவங்களும் சேர்ந்து நாட்டு மக்களை வாழ வைக்க முடியும் என்ற அளவிலே அமைந்திருக்கின்றது. நேற்று காலை வரையிலே அவர், அந்தத் துறவி ஒரு விஷயத்திற்காக என்னை என்ன பாடுபடுத்தினார் என்பது எனக்குத் தான் தெரியும். வேறொன்றுமில்லை. ஜல்லிக்கட்டு அனுமதிக்கப்படுமா, அனுமதிக்கப்படாவிட்டால் நம்முடைய பழந்தமிழர்களுடைய பண்பாடு, கலாச்சாரம் இவைகள் அழிந்துவிடும் என்ற குமுறல், இந்த வட்டாரத்து மக்களுக்கு அதிகமாயிருக்கின்றது. அதைக் கவனியுங்கள், நீங்களே டெல்லிக்குச் சென்றாவது, ஒரு நல்ல முடிவை ஏற்படுத்துங்கள் என்று அவர் கேட்டுக் கொண்டது இருக்கிறதே, அது அவருக்கு நம்முடைய பழைய கலாச்சாரங்களின்பால், நம்முடைய பண்பாட்டின்பால், நம்முடைய வீர வரலாற்றின்பால் எந்த அளவிற்குப் பிடிப்பும் பற்றும் இருக்கிறது என்பதற்கு அடையாளம் ஆகும்.

நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கடைபிடிக்கப்பட்ட வீர விளையாட்டு

ஏறத்தாழ நான்காயிரம் ஆண்டு காலப் பண்பாடு அது. இரண்டு நாட்களுக்கு முன்பு இந்துப் பத்திரிகையில் இத்தகைய செய்திகளை, வரலாற்றிலிருந்து எடுத்து எழுதுகின்ற நண்பர் மகாதேவன் அவர்கள் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அந்தக் கட்டுரையிலே இந்த ஜல்லிக் கட்டு என்பது ஏறு தழுவுதல் என்ற இந்த விளையாட்டு நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழர்களால், திராவிடர்களால் கடைபிடிக்கப்பட்ட ஒன்று என்று, அவர் குறிப்பிட்டிருக்கின்றார். அதை எடுத்துச் சொல்ல எதிர்த்தவர்களுக்கு மனம் இல்லை. ஆனால் ஆளுகின்றவர்களுக்கு அந்தச் செய்தி உடனடியாகக் கிடைத்தது. அதை எடுத்துச் சொன்னார்கள். சொல்ல வேண்டியவர்களுக்குப் புரிந்தால் நல்லது நடக்கும் என்பதற்கும் நேற்றைய தீர்ப்பு ஒரு நல்ல உதாரணம் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள முடியும்.

நன்றி : முரசொலி

விருதுகள் முருகன்பாதம் வீழ்மலர் என்னக்கொள்வோம்!

(கவிமாமணி.பொற்கிழிக்கவிஞர். டாக்டர். **ச. சவகர்லால்**, சென்னை)

முருகனைத் தேடி நல்ல
விருதுகள் வரலாம்; அந்த
விருதுகள் முருகன் பாதம்
வீழ்மலர் என்னக் கொள்வோம்
தருகிற நல்ல நெஞ்சம்
தகுமுயர் வடைந்தி டட்டும்
விருதுதான் இன்றைக் கிங்கே
மேன்மையைப் பெற்ற தென்பேன்.

சிந்தனை ஆழம்; சொல்லும்
சொல்லினில் தெளிவு; என்றுமே
செந்தமிழ் மக்கள் மேன்மை
சிந்தையின் அகலா மாண்பு
எந்தவோர் கருத்தென் றாலும்
எதிருளோர் இதயத் துள்ளே
சென்றுமே பதியு மாறு
சொல்கிற ஆற்றல் காண்போம்.

கண்டவர் வியந்து நின்றோம்
கருத்திலே சிந்த னையில்
அன்றைய அடிக ளாரை
அச்சிலே வார்த்த தேபோல்
நின்றுரை யாற்றும் மாண்பை
நெஞ்சுறப் போற்றி னோம்யாம்
என்றுமே உங்கள் மேன்மை!
ஏறியே உயர்க! வாழ்க.

முருகனைப் போற்றிப் பாட
முனையினும் முழுமை யான
பெருமையைச் சொல்லல் இந்தப்
பேதையால் ஆகு மோதான்!
முருகனாய் உம்மைக் காண்பேன்
உம்மடி பாட்டை வைப்பேன்
விருதினைப் பெற்ற பாதம்
வீழ்ந்துநான் வணங்கு கின்றேன்.

"தென்மகேந்திரம் - கயிலையா?"

"மெய்யன்"

வணக்கத்திற்குரிய குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீன 45ஆவது குருமகாசந்நிதானம் - தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் மக்கள் சிந்தனை சென்ற ஐப்பசி இதழில் "திருக்கோயில் பூசனை எல்லாரும் செய்யலாமா - ஓர் அய்வு" தொடர் கட்டுரையில்

"உன்னதத்தென் மகேந்திரமே உயர்மலைஅம் சையகிரி
வின்னவிலும் சுத்திகமே இருக்கும்உயர் விந்தியமே
மன்னுபுகழ் மிகுபாரி யாத்திரமே எனப்ப கர்ந்த
இன்னகிரி ஏழும்முதல் குமரிதலத்து இசைந்தனவே!"

- சிவதருமோத்தரம் - கோபுரவியல் - 47

என்ற பாடலை எடுத்துக்காட்டி,

"(1) இறைவன் மகேந்திரமலையில் இருந்து ஆகமம் அருளிச் செய்ததாகத் திருவாசகம் போற்றுகிறது. (2) மகேந்திரமலை குமரிக்கண்டத்தில் இருந்ததேயாம். (3) இறைவன் மகேந்திர மலையில் அருளிச்செய்த ஆகமம் வழிவழி தமிழ்முனிவர்களால் வழக்கில் கொண்டுவரப் பெற்றிருக்கவேண்டும்" என்று எழுதியுள்ளார்கள்.

இதற்குச் சான்றாக, அடிகள் பெருமான் காட்டியுள்ள மேற்குறித்த சிவதருமோத்தரச் செய்யுள் மூன்று செய்திகளை உணர்த்துகிறது. அவை (1) உன்னதம் (2) தென்மகேந்திரம் (3) முதல் குமரிதலத்து இசைந்தன என்பனவாகும்.

முதல் குமரி நாட்டின் தென்பகுதியில் இருந்தது உன்னதமான - மிகமிகப் பெருமையுடையதாகிய மகேந்திரமலை என்பது இதன் பொருள்.

அடிகள் பெருமானின் மேற்குறித்த கருத்தை "எந்த மகேந்திரம்" என்ற தலைப்பில் திருப்பனந்தாள் காசித்திருமடத்தின் "ஸ்ரீகுமரகுருபரர்" நடப்பு மார்கழி இதழில் திருமிகு வீதிவிடங்கன் அவர்கள் மறுத்து எழுதியுள்ளார். அவர் கட்டுரையின் முடிவுரையாக "1 பரத கண்டத்தின் தென்பகுதியில் இருக்கும் சிலமலைகளுக்கு மகேந்திரம் என்னும் பெயர்

இருந்தாலும், அம்மலைகளில் சிவபெருமான் எழுந்தருளியிருந்தான் என்பதற்குத் தக்க ஆதாரங்கள் இன்மையால், (2) இம்மலைகளில் ஏதேனும் ஒன்றில் பரம்பொருள் இருக்கை கொண்டு ஆகமங்களை அருளிச் செய்தான் என்று கூறவியலாது (3) ஆதலால் திருவாசகத்தில் குறிப்பிடப்படும் மகேந்திரம் தென்னாட்டில் இல்லை என்பதும் (4) அது பரதகண்டத்தின் வடபால் உள்ள இமயமலையின் வடகிழக்கில் இருக்கும் கயிலை மலையே என்பதும் உறுதியாகிறது" என்று முடிக்கிறார்.

இம்முடிவுரை பற்றிய சிந்தனை

நண்பர் அவர்கள் "முதல் குமரி" என்ற சொல்லுக்குப் "பரத கண்டம்" என்று தவறாகப் பொருள் காண்பதன் மூலம், தொல்பழம் புவியியலார் அனைவரின் ஆய்வு முடிவு, பழந்தமிழ் இலக்கியங்கள், இறையனார் களவியல் உரை ஆகியவற்றுக்கு முற்றிலும் மாறுபட்டு நிற்கிறார். அதன் மூலம், அக்கட்டுரையைப் படிப்பவரை வடதிசை நோக்கி ஈரத்துச் செல்கிறார். உண்மை நிலை என்ன? காண்போம்.

தொல்பழம் புவியியலார்

தொல்பழம் புவிநிலையை ஆய்ந்த அறிஞர் பெருமக்கள் அனைவரும் ஒத்த முடிவினராய் உள்ளனர். அது : "இன்றைய ஆஸ்திரேலியா கண்டம் முதல் ஆப்பிரிக்காக் கண்டம் வரையும் இன்று கடலாக உள்ள பகுதி, தொல்பழங்காலத்தில் பெருநிலப்பரப்பாக இருந்தது" என்று ஆய்ந்து முடிவு செய்து அதனை "இலமூரியாக் கண்டம்" என்று குறிக்கின்றனர்.

(2) அன்றைய இலமூரியாக் கண்டத்தின் பெரும்பகுதி, (இன்றுள்ள இலங்கையும் சில தீவுகளும் தவிர கடல்கோட்பட்டது. அது கடற்கோள்பட்ட பிறகு நம் இந்தியத் திருநாட்டின் வடபுலத்து இமயம் தோன்றியது. இமயம் தோன்றுமுன் அப்பகுதி அன்று கடலாக இருந்தது என்று ஆய்ந்து, சான்றாக படிவுப்பாறைகளால் அமைந்த இமயமலைப் பாறையைப் பிளக்கும்போது அப்பாறை இடையே, அன்றைய கடல்வாழ் உயிரினங்கள் அகப்பட்டு இறந்து மிஞ்சிய எச்சங்கள் (FOSSILS) உள்ளன" என்கின்றனர்.

எனவே தொல்பழம் புவியியலார் கருத்துப்படி இன்றைய நம் கன்னியாகுமரிக்குத் தெற்கே இலங்கையை உள்ளடக்கிய பெருநிலப்பரப்பு கடலில் மூழ்கியபிறகு தோன்றியது கயிலை உள்ளிட்ட இமயமலைப்பகுதி என்பது தெளிவு.

பண்டைத் தமிழ் இலக்கியங்கள்

நம் பண்டைத் தமிழ் இலக்கியங்கள், இன்றைய கன்னியாகுமரிக்குத் தெற்கே இருந்தது குமரிநாடு என்றும், அது கடற்கோட்பட்டது என்றும் எடுத்துக் கூறுவதை அறிஞர் உலகம் ஏற்றுப் போற்றுகிறது.

இறையனார் களவியலுரை

பண்டைக் குமரிநாடு இருமுறை கடற்கோட்பட்டது. அதனால் அங்கு முன் இருந்த தலைச்சங்கமும், பிறகு அமைந்த இரண்டாம் தமிழ்ச் சங்கமும் அழிய நேர்ந்தன. அச்சங்கத்திருந்து கடல்கோளில்பட்டு அழிந்த நூல்கள் இவை இவை என்பதுடன் இத்தொடக்கத்தன (முதலியன என்பது பொருள்) என்றும் கூறி, மூன்றாம் தமிழ்ச்சங்கம் இன்றைய மதுரையில் அமைந்ததைக் கூறுகிறது.

இவற்றால் அறிய வருவன

(1) குமரிநாடு கடலுள் மூழ்கியபிறகு தோன்றியது திருக்கயிலை உள்ளிட்ட இன்றைய இமயமலைப்பகுதி. (2) குமரி நாட்டு அழிவில் மக்களுடன் நற்றமிழ் நூல்கள் மிகப்பல அழிய நேர்ந்ததால் நம் செல்வங்களை நாம் இழந்தோம். (3) சிவதருமோத்தரம் கூறும் "முதற்குமரி" என்பது முதற்கடல்கோளுக்கு முன் இருந்த குமரிநாட்டுப் பகுதியாகும். (4) இம்முதற்குமரியின் தென்பகுதியில் இருந்த ஏழுமலைகளுள் ஒன்று மகேந்திரமலை (5) கடற்பட்ட முதல் குமரித் தென் மகேந்திரத்தை, வடக்கே இன்றுள்ள கயிலை என்பது சற்றும் பொருந்தாது என்பனவாகும்.

சோதி மகேந்திரம்

"சுற்றுஆய சோதி மகேந்திரம்"

- திருவிசைப்பா, உறவாகிய...பா.11.அடி.3)

மகேந்திரம், கயிலை மலையைக் குறிப்பது என்று கூறி மாறுபட்டு நிற்கும் நண்பர். இங்குச் "சோதி" என்பதற்கும், மகேந்திரம் என்பதற்கும் கூட, புதுப்பொருள் கண்டு கூறுகிறார்.

"சோதி, இவ்விடத்தில் வெண்மை ஒளியைக் குறித்து நிற்கிறது. எனவே "சோதி மகேந்திரம்" என்பது வெண்மையாகிய கயிலை மலையைக் குறித்து நிற்பதை எளிதாக உணரலாம்" என்றும்;

"மகா இந்திரம் - மகேந்திரம். மகா = மகத்தான. இந்திரம் - மேன்மையுடையது. மிக மேலாகிய பெருமையுடையது கயிலை மலையாதலின் மகேந்திரம் எனப்பட்டது" என்றும் கூறுகிறார். கயிலையின் சிறப்புகளை விவரிக்கிறார் பாடல்கள் மூலம்.

ஆய்வு

மகேந்திர மலைபற்றித் திருவிசைப்பா "உறவாகிய யோகம்" பகுதி. தனது 12 திருப்பாடல்களிலும் குறிக்கிறது. இவற்றில் வரும் மகேந்திரமும் கயிலையே என்பது நண்பர் கருத்து.

கயிலைத் திருமலை வெண்பனி மூடியது; அதன் புறமெங்கும் வெண்பனியன்றி வேறில்லை என்பது கண்கூடு.

ஆனால் திருவிசைப்பா கூறும் மகேந்திரமலை அப்படிப்பட்டதன்று. குமரிநாட்டுத் தென் மகேந்திரம், "மணிநீர் அருவியும்; வானே தடவு நெடுங்குடுமியும்; மறிஏறு சாரலும்; மரவு ஆர்பொழில், வேங்கை எங்கும் மழையும் சூழ்ந்தது; வருநீர் அருவியும், ஆறு ஆர் சிகரமும் கொண்ட திருக்காட்சியுடையது என்று மலை வளங்களை எல்லாம் மகேந்திர மலைக்கு அடைமொழிகள் ஆக்கித் தருகின்றது திருவிசைப்பா.

இதன் மூலம் தென்மகேந்திரம் தாவரவகையும், விலங்குகளும் ஆறு, அருவிகளும் பெற்றிருந்ததை அறியும்போது அம்மலை, இடையிடையே வெண்சரிகை இழைத்த பச்சைப் பட்டாடை போர்த்தது போன்றது என்பதை உணர்தல் எளிது.

மலைக்குரிய பல்வகை வளங்களும் பாங்குறப் பொலிந்த தென் மகேந்திரம் எங்கே? வெண்பனிக்காட்சியன்றி வேறில்லா வட கயிலை எங்கே? இரண்டும் ஒன்று எனல் எவ்வாறு பொருந்தும்?.

எனவே இத்திருவிசைப்பாப் பகுதிக்கு - சுற்றாய சோதி மகேந்திரம் - என்பதற்கு - சுற்றிலும் ஒளி சூழ்ந்தது, சுற்றிலும் வெண் சரிகை கொண்ட பச்சைப் பட்டாடை தரும் ஒளி - சூழ்ந்தது மகேந்திர மலை என்பது பொருள். இது எவ்வகையிலும் பனியே மூடிய கயிலையைக் குறிக்காது என்பது அங்கை நெல்லிக்கனி.

மகேந்திரநாதன்

"தூதுவெள்ளை நீறணி எம்பெருமான்
சோதி மகேந்திர நாதன்வந்து
தேவர் தொழும்பதம் வைத்த ஈசன்"

- திருவாச... திருவார்த்தை 9. அடி 1-2

மகேந்திர நாதன்; தூவெள்ளை நீறணிகின்றவன், எம்பெருமான், சோதி வடிவன், தேவர்தொழும் திருவடியினன் என்பது இதன் இயல்பான பொருள்.

இப்பகுதியில் கீழ்க்கோடிட்ட பகுதியை ஏனோ ஒதுக்கிவிட்டு, கீழ்க்கோடிடாத பகுதியை மட்டும் நண்பர் தருகிறார்.

மகேந்திரமலையைச் சிவபெருமான் தமது இருக்கையாகக் கொள்ளவில்லை என்பது நண்பரின் முடிவு. ஆதலின் இங்கும் மகேந்திரம் என்பதற்கு வெண்மை ஒளி என்று பொருள் கொள்ளச் செய்கிறார்.

ஆய்வு

நண்பரின் போக்குப் பொருந்துமா? நண்பர் கருத்து அதுவாயின் மகேந்திரநாதன் வெண்மை ஒளியுடையவன் என்று தவறாகக் காணநேரும். ஏன்? அப்பன் செம்மேனி எம்மான், பொன்னார் மேனியன். எனவே வெண்மை ஒளியினன் கயிலையில் எழுந்தருளிய மகேந்திரநாதன் என்பது பொருந்தாது. (மேலும் இப்பகுதியிலுள்ள மூன்று

அடைகளும் தூவெள்ளை நீறணிதல், எம்பெருமான் சோதி என்பன) மகேந்திரநாதனையே நோக்கி நிற்பன. எனவே சோதி என்பதற்கு வெண்மையான ஒளிஎன்று கூறாது, சிவபெருமான் என்றே பொருள் கொள்ளுதல் மிகப்பொருந்தும் சிவபெருமானை,

"ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன் எங்கள் சோதி"

- திருமுறை 3. திருப்பாசுரம் 5. அடி 1-2

என்பதால் சிவபெருமான் "சோதி" என்றே குறிக்கப்பெறுதலை அறியலாம். "வெண்மை ஒளியுடைய கயிலை ஆகிய மகேந்திர மலையில் எழுந்தருளியவன்" என்று நண்பர் கூறுவது சற்றும் பொருந்தாது சோதி – சிவம் என்பதே பொருந்தும் என்க.

மகேந்திரத்தில் ஐம்முகச் சிவம் ஆகமம் பணித்தல்

"மற்றவை தம்மை மகேந்திரத்து இருந்து
உற்றஐம் முகங்களால் பணித்து அருளியும்"

-திருவாச...கீர்த்தி. அடி 19-20.

நண்பர் முன்போலவே இதிலும் கீழ்க்கோடிட்ட பகுதியை விட்டுவிட்டு நம்மை மருட்டுகிறார்.

இங்கு "மற்று" என்பது வினைமாற்றுப் பொருளது. "அவை தம்மை" என்பது ஆகமங்களைக் குறிப்பது. ஆகமங்களைக் கட்டளையிட்டருளியது பற்றிய செய்தி கயிலையிலும் நிகழ்வது ஆதலின், இப்பகுதிக்கு இதன் முன் உள்ள இரண்டு அடிகளைக் கொண்டே பொருள் காணவேண்டும்.

சுறாமீனைக் கொன்று ஆகமம் வாங்கினான்

"கேவேடர் ஆகிக் கெளிறது படுத்து
மாவேட்டு ஆகிய ஆகமம் வாங்கியும்"

- திருவாச. கீர்த்தி. அடி 17-18.

வலைஞன் ஆகிக் கெளிறு என்னும் மீனைக்கொன்று பெரிய ஏட்டில் எழுதப்பெற்றுள்ளதாகிய ஆகமங்களைப் பெற்றும் - என்பது மகாவித்துவான் தேசிகர் அவர்களின் "குருவருள் விளக்கத்"தின் உரை.

இப்பகுதி முழுவதையும் நண்பர் காட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கேவேடர் - மீன்வலைஞர். கெளிறு - சுறாமீன். இப்பகுதி சிவபெருமானின் திருவிளையாடல் ஒன்றினைக் கருவாகக் கொண்டது. அது வருமாறு :

தனியிடத்திலிருந்து, சிவபெருமான் அம்மைக்கு ஆகம நுட்பங்களை அருள, விருப்பின்றிக் கேட்ட அம்மையை வலைஞர் மகளாகச் சபித்து; தாயின் சாபத்திற்குக் காரணமான ஓலைச் சுவடிகளை வாரி எடுத்துக் கடலில் எறிந்த முருகனை ஊமையாகப் பிறக்கச் சபித்து, முன்னரே ஆணை வழங்கியிருந்தும் தன் தனியிடத்தில் முருகனை அனுமதித்த நந்திதேவரைச் சுறாமீனாகவும் சபித்தார். நந்திதேவர் சுறாமீனாகி மிகப்பெரிய ஏட்டில் இருந்த ஆகமச்சுவடிகளை தன்னுள் சுமந்து கொண்டு வலைஞர்களுக்குத் துன்பம் செய்ததால் சிவபெருமான் சுறாமீனைக் கொன்று ஆகமம் வாங்கி, வலைஞர் மகளாக அவதரித்த அம்மையை மணந்தான் என்பது இதனுள் அமைந்த செய்தி.

எனவே, "மற்று" என்ற வினைமாற்றுச் சொல்லை நம் மனத்தில் நிறுத்தி, "கேவேடர்ஆகி.... பணித்து அருளியும் மற்று அவை - தோற்றுவித்து அருளியும் என்ற நான்கு அடிகளையும் கூர்ந்து நோக்கிப் பொருள்கொள்ள வேண்டிய இடம் இது என்பது அறியலாம்.

கோவேடராகிக் கெளிறது படுத்து மாவேட்டு. ஆகிய ஆகமம் வாங்கிய இடம் மகேந்திர மலை என்பது தெளிவு. நண்பர் கருத்துப்படி மகேந்திரம் கயிலையைக் குறிப்பது என்றால், கயிலை மலையில் சுறாமீன் திரிய முடியுமா? கடலிலன்றோ திரிவது அது; சுறாமீன் வேட்டைக்குக்குச் சிவபெருமான் கயிலை மலைக்குச் சென்றான் என்பதும் எப்படிப் பொருந்தும்?" இன்ன பிற வினாக்கள் எழுமே என்பதால்தான்

நண்பர் "கோவேடராகி........ வாங்கியும்" என்ற இப்பகுதியை நண்பர் முற்றாகக் கைவிட்டார் என்க.

இங்கு, ஆகமம் "பணித்தது" கயிலையில் என்று நண்பர் கொண்டதால் "உற்றஐம்முகங்களாற் பணித்தருளியும்" என்ற பகுதியையும் கைவிட்டார் போலும்.

ஆகமம் தோற்றுவித்தான்

"மன்னு மாமலை மகேந்திரம் அதனில்
சொன்ன ஆகமம் தோற்றுவித்து அருளியும்"

பெருமை பொருந்திய மகேந்திரமலையில் - கயிலையன்று - தாம் முன்பு அருளிய ஆகமங்களை (அவை கண்காண இல்லாது இருந்தமையால்) வெளிப்படுத்தினான் என்பது பொருள்.

இதுவரை நாம் கண்ட பகுதிகளில் அமைந்துள்ள "பணித்தல்" "வாங்குதல்", "தோற்றுவித்தல்" ஆகிய மூன்று நிகழ்வுகளும் குமரி நாட்டு மகேந்திர மலையில் நிகழ்ந்தவை என்பதும் கயிலையிலன்று என்பதும் வெள்ளிடை மலை.

அம்மைக்கு ஆகமம் அருளுதல்

திருமாளிகைத் தேவர், மகேந்திரமலையில் அப்பன் அம்மைக்கு ஆகமம் அருளிய செய்தியை

"வருநீர் அருவி மகேந்திரப் பொன்
மலையில் மலைமகளுக்கு அருளும்
குருநீ"

– உறவாகிய யோகம்.10.அடி 1-2

என்று குறிக்கிறார்.

இங்குப் பொன்மலை என்றது அழகிய மலை என்ற பொருள் தருவது. மலைக்கு அழகு மலைவள மாண்புகள் அனைத்தும் பெற்றிலங்குவது. மகேந்திரமலையின் வளம்பற்றி முன்னரே கண்டோம்.

ஆனால் "பொன்மலை" என்றது கயிலை மலையைக் குறிப்பது என்று கொண்டு நண்பர், திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்து 50ஆம் பாடலை மேற்கோள் காட்டுகிறார். இப்பாடல் கயிலையைக் குறிப்பது ஆதலின் கயிலையைப் பொன்மலை என்னாது "வெள்ளிமால்வரை" என்று குறிப்பிடுகிறதே தவிர, மலைவளம் பற்றிய ஏதும் குறிக்கவில்லை என்பது நோக்கத்தக்கது. நண்பர் காட்டும் மற்றொரு சொல் கயிலையை "வெண்மலர் போல்வது அம்மலை"

என்றே உவமை காட்டுகிறது.

வெண்பனியே மூடிய கயிலையில், திருமாளிகைத் தேவர் மகேந்திரமலையில் உள்ளதாக இங்குக் காட்டும் "வருநீர் அருவி" ஏது? எனவே இங்கும் "மகேந்திரப் பொன்மலை" என்பதில் உள்ள பொன்மலை என்பது கயிலையைக் குறிப்பதன்று; குமரிநாட்டுத் தென் மகேந்திரத்தின் மலைவள அழகைக் குறிப்பதேயாகும்.

ஆகமம் அருளியது மகேந்திரத்திலா? கயிலையிலா?

திருமாளிகைத் தேவர் வாக்குப்படி, மகேந்திரமலையில் ஆகமம் அருளியதும், தெய்வச் சேக்கிழார் வாக்குப்படி கயிலை மலையில் ஆகமம் அருளியதும் ஏற்கத்தக்கனவே. எப்படி?

இறையனார் களவியலுரை குறிப்பிடும் நூல்களுடன் ஆகமங்களும், கடற்கோள்பட்டிருத்தல் வேண்டும் என்பது இயல்பான கருதுகோளே... இதனை "இத்தொடக்கத்தன" என்று களவியலுரை குறிப்பதால் உணர இயலும்.

மேலும் பழம்பாடல் ஒன்று கடல்கொண்ட நூல்கள்பற்றிப் பின்வருமாறு குறிக்கிறது.

"ஏரணம் உருவம் யோகம் இசைகணம் கிரதம் சாலம்
தாரணம் மறமே சந்தம் தம்பம்நீர் நிலம் உலோகம்
மாரணம் பொருள் என்று இன்ன மானநூல் யாவும் வாரி
வாரணம் கொண்டது அந்தோ வழிவழிப் பெயரும் மாள"

– T.V.S. பாண்டியர் வரலாறு (1956) பக்.9

என்பதில் "மானநூல் யாவும்" – பெருமை பொருந்திய இத்தகு நூல்கள் அனைத்தையும் என்று பொருள்தரும். இதில் ஆகமங்களும் அடங்கும் என்க.

"ஊழிதோறூழி உலகம் காக்கும் ஒருபெருந்தலைவன் இறைவன் ஆதலின் குமரிநாட்டைக் கடல்கொண்டதால் சமுதாயம் இழந்த ஆகமங்களை மீண்டும் அருளினான் கயிலையில்" என்று கொள்வதே பொருந்தும்.

மகேந்திரமலை மகேந்திரவெற்பன்

"மந்திர மாமலை மகேந்திர வெற்பன்
அந்தமில் பெருமை அருளுடை அண்ணல்"

இப்பகுதியில் கீழ்க்கோடிட்ட இரண்டாம் அடி குறிப்பது சிவபெருமானையே என்பது தெள்ளத் தெளிவானது. மகேந்திரமலையில் சிவபெருமான் இருக்கை கொள்ளவில்லை என்ற மாறுபட்ட கருத்தால், நண்பர் இந்த இரண்டாம் அடியைக் குறித்திலர்.

முதலடியில் உள்ள மந்திரம் என்பதற்கு நண்பர், கோயில், சுருதி என்ற பொருள்களையும் (பக்.114) குறிக்கிறார். மந்திரம் - கோயில் என்றால் மகேந்திர மலையில் கோயில் இருந்தது என்றாகும். இதன் மூலம் மகேந்திரமலையில் கோயில் இல்லை என்ற நண்பர் தன்னைத் தானே மறுத்துக் கொள்கிறார்.

இனி, மந்திரம் = சுருதி என்று பொருள் தருமா? எனில் தராது. சுருதி = வேதம். குமரிநாடு ஆரியர் வருகைக்கு முன்னது என்பர். குமரி நாட்டவர் பேசியது இன்தமிழ். எனவே ஆரியர்க்கே உரிய வேதத்தை, அது அமைந்த வடமொழியில் தமிழர்க்கு அருளினான் என்பது காலத்தால், இடத்தால் பிழைபடும்.

மந்திரம் என்பதற்குக் கடல் என்றும் பொருள் உண்டு. மந்திரமலை மகேந்திர வெற்பன் = கடலையடுத்த பெரிய மலையாகிய மகேந்திரமலைக்கு உரியவன், அந்தமில் பெருமையன், அருளுருவானவன்; யார்க்கும் என்றும் தலைமையன் என்று கொள்வதே பொருந்தும். ஏன்?

சுறாமீனைக் கொன்றது, கடலில்லாக் கயிலையிலன்று; மந்திரம் சார்ந்த கடல் சார்ந்த குமரித் தென்மகேந்திரத்தில் என்பதே பொருத்தமானது.

தேவர்கள் தேடியது

"வேடுஉரு வாகி மகேந்திரத்து இருந்து
மிகுகுறை வானவர் வந்து தன்னைத்
தேட இருந்த சிவபெருமான்
சிந்தனை செய்துஅடி யோங்கள்உய்ய

ஆடல் அமர்ந்த பரிமா ஏறி
ஐயன் பெருந்துறை ஆதி அந்நாள்
ஏடர்களை எங்கும் ஆண்டு கொண்ட
இயல்புஅறிவார் எம்பிரான் ஆவாரே?

– திருவாச... திருவார்த்தை.பா.4

இப்பகுதியில் அமைந்த செய்திகூறும் நண்பர், "அருச்சுனன் பொருட்டுக் கயிலையில் இறைவியுடன் இறைவன் வேடு உருவம் கொண்டு கயிலைச் சாரலில் வராகத்தின்பின் சென்றிருந்தார் ஆதலின் தேட நேரிட்டது" என்று கூறுகிறார்.

ஆனால் இத்திருப்பாட்டில், வராகம் – பன்றி – பற்றியோ, அம்மை வேடுருவம் பூண்டு சென்றது பற்றியோ யாதொரு குறிப்பும் இல்லை என்பதை இதனை ஒரு முறை படித்தவரும் எளிதில் அறிவர்.

மீன்வலை வேடுவனாக அப்பன் மட்டும் (அம்மை, மீன்வலைஞன் மகளாக அவதரித்திருந்தமையால்) தனியே சென்றிருந்தான். அப்போது அவன் இருக்கையாகிய முதல் குமரித் தென் மகேந்திரத்தில் அவனைக் காணாதது தேவர்கள் தேடிச் சென்ற செய்தி குறிப்பது இப்பகுதி. எனவே அம்மையும் அப்பனுமாகப் பன்றிப்பின் தொடர்ந்த கயிலைச் செய்தி குறிப்பதன்று.

மகாவித்துவான் தேசிகர் அவர்கள் தமது குருவருள் விளக்கத்தில் குறிக்கும் விளக்கம் நமக்கு இதனை விளக்குகிறது.

வராக வேடுவனும் மகேந்திரமும்

"வண்டார் குழல்உமை நங்கை முன்னே
மகேந்திரச் சாரல் வராகத் தின்பின்
கண்டார் கவலவில் ஆடி வேடர்
கடிநா யுடன்கை வளைந்தாய்"

– (திருவிசைப்பா உறவாகிய... 6. அடி 1-2)

இதுவரை நாம் பார்த்த இடங்களில் இதுதவிரப் பிற எல்லாவிடத்தும் மகேந்திரம் என்பது முதல் குமரித் தென்மகேந்திரமே குறித்தது. இத்திருப்பாடலில் மட்டும் அருச்சுனன் பொருட்டு அம்மையும் அப்பனும் வேடர்வடிவம் பூண்டுப் பன்றிப்பின் சென்ற கயிலை நிகழ்ச்சி குறிப்பது ஆயினும் இங்குக் கயிலையை மகேந்திரம் என்று குறிக்கிறார்.

இங்கு மட்டும் கயிலை, மகேந்திரம் என்று குறிக்கப்பெறக் காரணம் என்ன? தருமை ஆதீனப்புலவர் மகாவித்துவான் திருமிகு. சி.அ.முதலியார் அவர்கள் குறிக்கும் காரணம் வருமாறு.

(1) மேலவற்றோடு ஒப்பவருவதற்பொருட்டு, (2) இங்குக் கயிலையை மகேந்திரம் எனப் பொதுவகையால் கூறிப் "போந்தார் எனினும் ஆம்" - என்பது அது.

மேலவற்றோடு ஒப்பவருதல் என்பது உறவாகிய யோகத்துப் பன்னிருபாடல்களுள், பதினோரு பாடல்களில் மகேந்திரமலை குறித்தாற்போல, இதிலும் மகேந்திரமலை என்பதே அமைதல் வேண்டும் என்ற திருமாளிகைத் தேவரின் திருஉளக் கருத்தைக் குறிப்பது.

பொதுவகையால் கூறுதல் என்பது; மகேந்திரம் கயிலை இரண்டும் மலைகள்; இரண்டுமே அம்மையப்பன் இருக்கைகள்; ஈரிடத்தும் ஆகமம் உபதேசிகப்பெற்றமை முதலிய பொதுவகைகளைக் குறிப்பது.

எனவே இவ்வோரிடம் மட்டும் கருதி, மகேந்திரம் என்று வரும் இடந்தோறும் அது கயிலையைக் குறிப்பது என்று கூறும் நண்பர் வீதிவிடங்கள் அவர்கள் கருத்து, பொருளுடையதாகாது.

முடிவுரை

இரு திருவிடங்களை ஆயுங்கால், அவற்றின் இருப்பிடம், இயற்கைச் சூழல், வரலாற்றுச் செய்தி, இடத்து நிகழ்வுகள் முதலிய எல்லாவற்றையும் உட்கொண்டு ஆய்வதே தக்கது என்பதை நண்பர் நன்கு அறிந்திருப்பார். ஆயினும்...

தென்மகேந்திரம், கடலுள் மூழ்கிய முதல் குமரி நாட்டின் தென்பகுதியினது. கயிலை, இந்தியத் திருநாட்டின் வடபாலது. தென் மகேந்திரம்; தொல்பழங்காலத்தது. கயிலை, மகேந்திரத்தின் காலத்துக்குப்பிற்பட்டது. தென்மகேந்திரம், கடலுள் மூழ்கியது. கயிலை, கடலாயிருந்த பகுதி மலையானதால் எழுந்தது. மகேந்திரம், மலைவளம் எல்லாம் பொதுளியது. கயிலை, வெண்பனி உறைந்து பிறமலை வளமற்றது. மகேந்திரம், கடல் சார்ந்தது. கயிலை, மலை - இமயம் சார்ந்தது.

மகேந்திரமலையின் பெயரால் அச் சிவபெருமான் மகேந்திரநாதன், மகேந்திரவெற்பன் என்று சுட்டப்பெற்றான். கயிலையின் பெயரால் அச் சிவபெருமான் கயிலாயநாதன், கயிலை மலையான் எனப் பெறுகிறான்.

மகேந்திரத்தில் சிவபெருமான் சுறாமீன் படுத்து ஆகமம் மீட்டான். கயிலையில் பன்றிப்பின் அதைப் படுத்து அருச்சுனனுக்கு வரம் தந்தான். மகேந்திரத்தில் சிவன் வலைஞரினக் காளையாய்த் தனித்துச் சென்றான். கயிலையில் அம்மை தொடர, தான் பன்றியைத் தொடர்ந்தான்.

மகேந்திரம் கடல்விழுங்க அழுந்தியது. கயிலையோ கடல் கெட, மலையானது.

முதற்குமரி தலத்து இசைந்திருந்த தென்மகேந்திரமலைக்கு "உன்னதம்" என்ற அடைமொழி, இதுகாறும் கண்ட அதன் சிறப்புகள் அனைத்தையும் சுட்டுமாறு அமைந்த அடைமொழி என்க.

எனவே மகேந்திரம் என்ற சொல் மிகமிக மேலானது என்ற பொருள் தருவதாயினும், அது கொண்டு அச்சொல் அமைந்துள்ள எல்லா இடங்களிலும் மகேந்திரம் என்ற சொல் கயிலை மலையைக் குறிக்கும் என்று கூறுதல் பொருந்தாது.

அருளாலய விருது

(தமிழாகரர். தெ. முருகசாமி, புதுச்சேரி)

முரசொலி கொட்டி நாளும்
முத்தமிழ் ஆட்சி தன்னை
உரமெனும் தோட்டி யாலே
உயர்வாக நடத்த, நாட்டின்
வரமாக வந்த வள்ளல்
வண்டமிழ்க் கலைஞர் தானும்
தரமாகத் தந்தார் விருது
தவத்திரு பொன்னம் பலர்க்கே!

வள்ளுவர் கோட்டம் கண்டார்!
வற்றாத குமரிக் கடலில்
தெள்ளுதமிழ் அவருக் காகத்
திகைப்புறும் சிலையை வைத்தார்!
விள்ளுபுகழ் அவற்றைப் போல
விருதினைத் தானும் தக்கோர்
கொள்ளுமா றமைத்த தற்கும்
கலைஞர்க்குச் சொல்வோம் நன்றி!

கொடுத்திடும் விருதைத் தானும்
கோமானாம் அடிக ளுக்கே
மடுத்திட்ட இந்த ஆண்டில்
மாண்புறக் கொடுப்ப தென்று
எடுத்திட்ட முடிபின் படியே
எல்லோரும் காணு மாறு
கொடுத்திட்டார் கலைஞர் என்றால்
குவலயப் பெருமை யன்றோ!

விருதினைக் கேட்டுப் பெற்று
விளம்பரப் படுத்த லோடு
விருதினை விலைக்கு வாங்கும்
வித்தக உலகில் வள்ளுவர்
விருதினைத் தமிழக அரசு
விரும்பியே தந்த தாலே
விருதுதான் அடிக ளாலே
விருதினைப் பெற்ற தம்மா!

மொக்குக்குள் மணமே போல
மொய்த்திடும் மாந்த வாழ்வைத்
தக்கவா றெடுத்துக் கூறும்
திருக்குறள் மணம்ப ரப்பத்
தக்கபே ரவைகள் தம்மைத்
தமிழகம் எங்கும் நாட்டி
மக்களை மாண்புறச் செய்த
மகாசந்நி தான மான;

தமிழ்மா முனிவ ரென்னும்
தவத்திரு அடிகள் செய்த
தமிழ்த்திரு தொண்டைத் தானும்
தவமாக நாளும் நாளும்
தமிழார்ந்த பொன்னம் பலர்தான்
தடையின்றிச் செய்வ தாலே
தமிழக அரசு, விருது
தந்துபுகழ் கொண்ட தம்மா!

சாதனை புரிந்தோர் தம்மை,
சரித்திரம் படைத்தோர் தம்மை,
சாதனை சிகரம் தொட்ட
சரித்திர வான்கள் என்றே
சாதனை விருதைத் தந்து
சரித்திரம் புகழச் செய்யும்
சாதனை வரிசை தானும்
சரித்திரம் பெற்ற தம்மா!

அய்யர்வாழ் குன்றக் குடியின்
அருளார்ந்த திரும டத்தின்
அய்யன்திரு அடிக ளுக்கே
அரசளித்த விருது தானும்
அய்யனரு ளால யத்தின்
அருமைமிகு விருதென் றிட்டால்
அய்யன்திரு வள்ளு வர்க்கே
அருளார்ந்த புகழா மன்றோ!

பொய்

(கவிவேந்தர். கா. வேழவேந்தன்)

"பொய்" என்னும் நாறுஞ்சே இலையேல், மண்ணில்
பூசலுண்டா? வழக்குண்டா? களரி உண்டா?
பொய்தானே கயமைக்குத் தாய்ப்பால்! பேசும்
பொய்தானே நேர்மையினைப் பொசுக்கும் கொள்ளி!
பொய்ம்மைக்கோ ஆயுள்மிகக் கொஞ்சம்; சொன்னால்
பூகம்ப அழிவுகளை விளைக்கும்! சொன்னால்
பொய்தானே அற்பர்முக மூடி; பொய்யர்
போடுகின்ற நாடகத்தால் சாகும் நீதி!

காதலியைக் கவிழ்ப்பதற்குப் பொய்ம்மை என்னும்
கைச்சரக்கைக் காதலரும் விரிப்ப துண்டு!
மாதுளைபோல் தித்திக்கும் கவிதைக் குள்ளே
வனப்போடு பொய்யிழைக்கும் கவிஞர் உண்டு!
"சீதளத்து நிலாதருவேன்" என்னும் பொய்யால்
சிறாருக்கே உணவூட்டும் தாய்மார் உண்டு!
ஆதலினால் பாதகத்தை விளைவிக் காத
அழகான நலப்பொய்கள் நடமா டட்டும்!

மெய்யுலகம் தழைப்பதற்கே உழைத்த "காந்தி"
மேதினியில் புகழ்வானின் முகடு சென்றார்!
பொய்யுலகைப் படைப்பதற்கே "கோய பல்"சோ
பொழுதெல்லாம் பாடுபட்டான்; அழிந்தே போனான்!
பொய்வாக்கைத் தந்துவிட்டு மக்கள் வாக்கைப்
போய்ப்பறித்த கசடர்களோ புழுதி யானார்!
பொய்யில்லா மெய்வாழ்வே மேன்மை சேர்க்கும்;
பொய்ப்பூவாம் "காகிதப்பூ" முடியா சேரும்?

(சென்ற இதழ் தொடர்ச்சி)

பெரியபுராணம் புலப்படுத்தும் வாழ்க்கை நெறி

(புலவர். ச.மு. விமலானந்தம்)

உ. விருந்தோம்பல்

"இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்றார் வான்புகழ் வள்ளுவர். இச்செந்நெறிக்கேற்ப இளையான்குடி மாற நாயனார் வாழ்ந்து இறையருள் பெற்றார். அவர் "இளையான்குடி" என்ற ஊரில் வாழ்ந்தவர். சிலருக்குத் தாம் பிறந்த அல்லது வாழ்ந்த ஊரால் சிறப்பு சேரும். இந்த வகையில் மாறனார் தாம் பிறந்த ஊருக்குச் சிறப்பைச் சேர்த்துச் சிறப்புற்றார். நாமும் நாம் பிறந்த வீட்டுக்கும், நாட்டுக்கும் புகழைச் சேர்க்க வேண்டும்.

மாறனார் நாள்தோறும் சிவனடியார்க்கு உணவளித்து உவப்பதைக் கடமையாகக் கொண்டிருந்தார். அவர் வளமான செல்வத்தை இழந்து வறுமையுற்ற போதும் சிவனடியார்களுக்கு உணவளித்து உபசரிக்கும் நெறியிலிருந்து தவறாதவர் என்பதை உலகத்தாருக்குக் காட்டச் சிவபெருமான் அவர் வறுமையுற்று வாடுமாறு செய்தார்.

பெருமழை பெய்து கொண்டிருந்த ஒரு நாள் நள்ளிரவில் மாறனாரும், அவர்தம் மனைவியாரும் உண்ண உணவின்றிப் பசியோடு படுத்துறங்கிக்கொண்டிருந்தனர். அப்போது சிவபெருமான் சிவனடியாராக அவர் வீட்டுக்கு வந்து உணவளிக்க வேண்டினார்.

மாறனார் செய்வதறியாது திகைத்தார். அவர் மனைவியார் கூறியபடி இருளில் மின்னல் வழிகாட்ட மழையில் நனைந்துகொண்டே சென்று, அன்று காலையில் விதைத்த நெல்லை வாரிக்கொண்டு வந்தார். விறகு இல்லாமையால் கூரையை அறுத்துத் தந்தார். அவர் மனைவியார் கணவர் கொண்டு வந்த நெல்லைக் கழுவிச் சேறு நீக்கிச் சுத்தம் செய்து, வறுத்துக் குத்தி உணவு சமைத்தார். மாறனார் தோட்டத்தில் நிரம்பி வளராத கீரையைப் பாசப்பழி முதலைப் பறிப்பார் போலப் பறித்துத்தர, அதனை அவர் மனைவியார் பலவகையான கறிகளாகச் சமைத்தார். பிறகு சிவனடியாரைத் துயிலெழுப்பி உணவுண்ண வேண்டினர். அப்போது அவர் மறைந்து வானில் காட்சி தந்து, தம்முலகை அடைந்திட அருள்புரிந்தார்.

இளையான்குடி மாறனார் வரலாற்றால் நாம் எவ்வளவு தான் வறுமையுற்றாலும், பசியால் வருந்தும் விருந்தினருக்கு எப்படியாவது, எளிய உணவையாவது இன்முகத்துடன் உபசரித்து, அன்புடன் அளித்திடவேண்டும் என்பதை அறிகிறோம்.

திருவள்ளுவர் விருது

திருக்குறள் நெறிபரப்பும் பெருந்தகையாளர் ஒருவரை அரசு தெரிவு செய்து 1986ஆம் ஆண்டு முதல் திருவள்ளுவர் விருது வழங்கிச் சிறப்பித்து வருகிறது.

இதுவரை இவ்விருது பெற்றோர் பட்டியல் வருமாறு : -

1.	1986	தவத்திரு குன்றக்குடி அடிகளார்
2.	1987	திரு. கி.ஆ.பெ. விசுவநாதம்
3.	1988	திரு. ச. தண்டபாணி தேசிகர்
4.	1989	திரு. வ.சுப. மாணிக்கம்
5.	1990	திரு. கு.ச. ஆனந்தன்
6.	1991	திரு. சுந்தர சண்முகனார்
7.	1992	டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்
8.	1993	திரு. தில்லை தே. கண்ணன்
9.	1994	திருக்குறளார் திரு. வீ. முனிசாமி
10.	1995	திருமதி க. சிவகாமசுந்தரி
11.	1996	முனைவர் மு. கோவிந்தசாமி
12.	1997	முனைவர் கு. மோகனராசு
13.	1998	முனைவர் இரா. சாரங்கபாணி
14.	1999	முனைவர் வா.செ. குழந்தைசாமி
15.	2000	திரு. த.சி.க. கண்ணன்
16.	2001	பெருங்கவிக்கோ.வா.மு. சேதுராமன்
17.	2002	முனைவர் இ. சுந்தரமூர்த்தி
18.	2003	முனைவர் கு. மங்கையர்க்கரசி
19.	2004	திரு. இரா. முத்துக்குமாரசாமி
20.	2005	புலவர் ப. அரங்கசாமி
21.	2006	முனைவர்.ஆறு. அழகப்பன்
22.	2007	முனைவர் க.ப. அறவாணன்

2008 ஆம் ஆண்டிற்கான திருவள்ளுவர் விருது

தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

அன்பான வேண்டுகோள்!

சமுதாய மாமுனிவராகத் திகழ்ந்த நமது அருள்நெறித்தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் ஆழமான சிந்தனைகளை அடியொற்றி நடைபோடும் "மக்கள் சிந்தனை" மாத இதழ் மேலும் பலம் பெறுவதற்குத் தங்களின் ஆதரவு தேவை. நமது கருத்து பரவலாக மக்களைச் சென்றடைய இதழ் அவசியம்.

ஆயுள் சந்தாவாகவோ, அல்லது ஆண்டுச் சந்தாவாகவோ அல்லது புரவலர் தொகையாகவோ மக்கள் சிந்தனை இதழுக்கு வழங்கி மக்களின் சிந்தனைகளை அகம்கொண்டு வெளிவர உதவுங்கள். "மக்கள் சிந்தனை"யின் பணி சிறப்புடன் தொடர வாசகராக, படைப்பாளராக சந்தாதாரராக விளம்பரதாரராக மாறுங்கள்; இன்றே சமய சமுதாயப் பணியை வலிமைப்படுத்துங்கள்.

- ஆசிரியர்

குன்றக்குடியில் மகளிர் கல்வியியல் கல்லூரி தொடக்கம்

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் அறக்கட்டளையின் நிர்வாகத்தின் கீழ் நடைபெறுகிறது.

கிராமப்புற மகளிர் மேம்பாட்டையும் பாரதி சொன்ன புதுமைப் பெண்களை உருவாக்குவதையும் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் கனவான பெண்களின் கல்வி மேம்பாட்டையும் நோக்கமாகக் கொண்டது.

கல்லூரியின் பெயர் :

தவத்திரு குன்றக்குடி அடிகளார் மகளிர் கல்வியியல் கல்லூரி

குன்றக்குடி - 630 206, சிவகங்கை மாவட்டம்.

தேசிய ஆணையக் கல்விக் குழுவின் அங்கீகாரம் பெற்றது

(NCTE)

எண் : F.SRO/NCTE/BEd/2006-2007/17285 Dated 23.1.08

தமிழக அரசு உயர் கல்வித்துறையின் அங்கீகாரம் பெற்றது.

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்துடன் இணைந்தது.

எண் : ALU/CDC/3-AC/33-BEd/2007 Dt. 14/2/08

வகுப்புகள் தொடக்கம்

2007 - 2008 ஆம் ஆண்டு பயிற்சிக்கான சேர்க்கை நடைபெறுகிறது.

2008 டிசம்பரில் தேர்வு எழுதுவதற்கு ஒரு வாய்ப்பு.

மிகுந்த அனுபவம் பெற்றுள்ள தக்க ஆசிரியர்களைக் கொண்டு வகுப்புகள் நடைபெறுகின்றன.

அரசு நிர்ணயக் கட்டணம்!

தரமான பயிற்சி! விடுதி வசதி உண்டு!

சேர்ந்து பயன் பெறுக!

தொடர்பு முகவரி : முதல்வர்
தவத்திரு குன்றக்குடி அடிகளார்
மகளிர் கல்வியியல் கல்லூரி
குன்றக்குடி - 630 206.
சிவகங்கை மாவட்டம்.

தொலைபேசி : 04565 - 210393 / 9486952058
04577 - 264227 / 9952277350

நிர்வாகி முதல்வர்



உ
சிவமயம்



தெய்வப்பழநியில் புகழ்பெற்றது

பழநி

பரிமள விலாஸ்

S. சித்தனாதன்

ஜவ்வாது வாசனை விபூதி
&
ஸ்பெஷல் பஞ்சாமிர்தம்

வாங்கி உபயோகியுங்கள்

Prop : S. சித்தனாதன் சன்ஸ்

அடிவாரம், பழநி — 624 601.

போன் கடை : 242405 வீடு & ஸ்டோர் : 242406

மக்கள் கல்வி நிலையம்

(மனிதவள மேம்பாட்டு அமைச்சகம், இந்திய அரசு)

குன்றக்குடி - 630 206

✆ : 04577 - 264567 Mobile : 94433 64200

குன்றக்குடி மக்கள் கல்வி நிலையம், கிராமம் மற்றும் நகர்ப்புற மக்களுக்கு கீழ்க்கண்ட தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்கிவருகிறது. பயிற்சி நிறைவு பெற்றபின் சான்றிதழ்களும், தொழில் துவங்க ஆலோசனைகளும் வழங்கப்படும். சுய உதவிக் குழுக்கள், கிராமப்புற மக்கள், இளைஞர்கள், பெண்கள் அனைவரும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இயக்குநர்,

மக்கள் கல்வி நிலையம், குன்றக்குடி.

பயிற்சிகள் (TRADES)

1. தையல் பயிற்சி 2.கணிப்பொறி பயிற்சி 3. எலக்ட்ரிக்கல் வயரிங் மற்றும் ரிப்பேரிங் 4. மின் அணுக்கருவிகள் பழுதுபார்த்தல் 5.வெல்டிங் பயிற்சி (பற்றவைத்தல்) 6.சீட் மெட்டல் உற்பத்தி 7.பைபர்கிளாஸ் பொருள்கள் உற்பத்தி 8.கட்டிட தொழில்நுட்பம், பொருள்கள் உற்பத்தி 9.இரண்டு நான்கு சக்கர வாகன பராமரிப்பு மற்றும் ரிப்பேரிங் 10.கயிறு மற்றும் பாய் தயாரித்தல் 11. குளிர்சாதனப் பெட்டிகள் ரிப்பேரிங் 12.வார்ப்பு உலோக உற்பத்தி 13.ஹாலோ பிளாக் & மொசைக் கற்கள் தயாரித்தல் 14. சாக்பீஸ், மெழுகுவர்த்தி தயாரித்தல் 15. கம்ப்யூட்டர்சாம்பிராணி, பினாயில் தயாரித்தல் 16. மருத்துவ உதவியாளர் 17.மருத்துவ உபகரணங்கள் பழுதுபார்த்தல் மற்றும் கையாளுதல் 18. திரை அச்சு வேலைகள் 19. வீட்டு உபகரணப் பொருட்கள் பழுதுபார்த்தல் 20.யோகா ஆசிரியர் பயிற்சி 21. ஓவியம் மற்றும் வரைபடம் வரைதல் 22. கைவினைப்பொருட்கள் தயாரித்தல் 23. உணவுப் பொருட்கள் தயாரித்தல் 24. கேஸ் வெல்டிங் 25. தொழில்முனைவோர் மேம்பாட்டுப்பயிற்சி 26. இயற்கை உயிர் உரம் (மண்புழு) தயாரித்தல் 27. வேளாண் சார்ந்த பயிற்சிகள் 28.தோட்டக்கலை சார்ந்த பயிற்சிகள் 29. கால்நடை சார்ந்த பயிற்சிகள் 30. மின்சாதனப்பொருட்கள் பராமரிப்பு

தகுதி	:	தன்முனைப்பு, தன் ஆர்வம் மட்டும்.
பயிற்சி நேரம்	:	பயிற்சி நாள்தோறும் இரண்டு மணி நேரம் மட்டும். ஒன்றுக்கும் மேற்பட்ட பயிற்சிகளில் சேரலாம்.
குறிப்பு	:	ஒவ்வொரு பயிற்சிக்கும் பயிற்சி நிறைவு பெற்றபின் தேர்வின் அடிப்படையில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

தவத்திரு குன்றக்குடி அடிகளாரின்

புதிய நூல்

உலகம் முழுக்கத் திருக்குறள் பரப்பப் பேரவை கண்டவர்; தம் வாழ்நாள் முழுக்க வள்ளுவ நெறியினை வழங்கி நின்றவர்; வாழ்ந்து நிலைத்தவர் ஆகிய அடிகள் பெருமான் எழுதிய திருக்குறள் உரை முதன் முதலாக, நூல் வடிவமாக!



தவத்திரு குன்றக்குடி அடிகளார்
திருக்குறள் உரை
(விலை. ரூ. 160/- பக்கங்கள் : 360)

பதிப்பகங்கள், கல்லூரி, பள்ளி, நிறுவனங்கள் மற்றும் இலக்கிய அமைப்புகள் இவற்றோடு மாணவ, மாணவியர்க்கும் "மக்கள் சிந்தனை" சந்தாதாரர்க்கும் விலைச் சலுகை உண்டு.

அடிகளாரின் முத்துவிழா வெளியீடு

அருள்நெறிப் பதிப்பகம்
குன்றக்குடி - 630 206
சிவகங்கை மாவட்டம்.

MAKKAL CHINTHANAI - February 2008 Price Rs. 5-00
Date of Publication 20-02-2008
Register of News Paper for India No. 85913/81, Register No. KKD/04/2006-2008

பெறுநர்

திரு ______ அவர்கள்

அவர்கள்
ஆதீனம்

அச்சிட்டோர் : சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி. ✆ : 264166